முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry Of Education, Higher Education and Vocational Education

12 | T | I.II

க.பொ.த.(சா/த) மாதிரி வினாப்பத்திரம் - 2026
G.C.E. (O/L) Model Question Paper – 2026

02

சைவநெறி I, II
Saivanery I, II

மூன்று மணித்தியாலம்
Three hours

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சைவநெறி I

அறிவுறுத்தல் :
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (**X**) இடுக.

1) "நாம் செய்த கொடிய வினையின் பயனை அடியோடு போக்கவல்லவர்" என கபிலதேவ நாயனாரால் போற்றப்படுபவர்
(1) பிரமன் (2) முருகன் (3) திருமால் (4) விநாயகர்

2) "இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞானநூல்கள்" என்ற பொருளைத் தரும் நூல்
(1) திருமுறைகள் (2) திருக்குறள் (3) ஆகமம் (4) புராணம்

3) பிரஸ்தான திரயங்களுள் ஒன்றாக கொள்ளப்படுவது
(1) திருவருட்பயன் (2) கந்தபுராணம்
(3) பகவத்கீதை (4) தம்மபதம்

4) ஞானாசிரியர் திருநோக்கினால் மாணாக்கனது பாசத்தை அழிக்கும் தீட்சை
(1) நயன தீட்சை (2) சாம்பவ தீட்சை
(3) திருவடி தீட்சை (4) விசேட தீட்சை

5) சைவபரிபாலன சபையின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மத்திய நிலையமாக விளங்குவது
(1) நாவலர் ஆச்சிரமம் (2) சம்பந்தர் ஆச்சிரமம்
(3) கண்ணகி ஆச்சிரமம் (4) தர்மபுர ஆச்சிரமம்

6) "மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" எனும் பாடலடியில் போற்றப்படுபவர்கள்
(1) தேவர்கள் (2) அசுரர்கள் (3) ஞானிகள் (4) சிவனடியார்கள்

7) இறைவனுக்கு சாத்தவேண்டிய அட்டபுஷ்பங்களுள் ஒன்றாக **கருதப்படாதது**
(1) தூய்மை (2) இரக்கம் (3) கொல்லாமை (4) ஐம்பொறியடக்கம்

8) "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" எனக் கூறும் நூல்
(1) புறநானூறு (2) ஆத்திசூடி
(3) திருக்குறள் (4) திருமந்திரம்

9) 'கந்தகோட்டம்' என்று சுட்டப்பட்ட ஆலயம்
(1) கதிர்காமம் (2) இணுவில் கந்தசுவாமி கோயில்
(3) தாந்தாமலை ஆலயம் (4) மண்டூர் ஆலயம்

10) அஸ்வினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களின் தொகுதி அடங்கிய இராசி
(1) சிம்மம் (2) கடகம் (3) ரிஷபம் (4) மேடம்

Past Papers Wiki

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

11) பிரதிஷ்டை வகைகளுள் சுபமுகூர்த்த நிர்ணயம் இல்லாத பிரதிஷ்டை
(1) ஆவர்த்தனம் (2) அநாவர்த்தனம்
(3) அந்தரிதம் (4) புனராவர்த்தனம்

12) திருஞானசம்பந்தர் "சடையா யெனுமால் ..." எனும் பதிகம் பாடிய சந்தர்ப்பம்
(1) பூம்பாவையை உயிர்ப்பித்தபோது
(2) பாம்புதீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தபோது
(3) தந்தையார் யாகம் செய்வதற்கு பொன் தேவைப்பட்டபோது
(4) முயலகன் என்னும் நோயினை நீக்கும்போது

13) நூறு திரிகள் எரிக்கக்கூடிய கல்விளக்கு காணப்படும் ஆலயம்
(1) முன்னேஸ்வரம் (2) திருக்கேதீச்சரம்
(3) பெரண்டிக் கோயில் (4) திருக்கோணேச்சரம்

14) பசுவதைக்கு உடன்பட மறுத்து திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழகம் சென்ற காலப்பகுதி
(1) போர்த்துக்கேயர் காலம் (2) ஆங்கிலேயர் காலம்
(3) ஒல்லாந்தர் காலம் (4) அநுராதபுர காலம்

15) உற்சவத்தின் ஆரம்பத்தில் ஊரைக்காவல் செய்யும் பாவனையில் வைரவ மூர்த்திக்குச் செய்யும் பூசை
(1) வாஸ்துசாந்தி (2) இரட்சாபந்தனம்
(3) கிராமசாந்தி (4) உஷக்காலப் பூசை

16) சீதையைத் தீண்டும் நோக்கில் காக உருவில் வந்தவர்
(1) இந்திரன் (2) திருமால் (3) சயந்தன் (4) பிரமன்

17) சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மலர்களாலான நூல் எனச் சிறப்பிக்கப்படுவது
(1) திருவருட்பயன் (2) திருத்தொண்டர் தொகை
(3) கைலாயமாலை (4) திருமந்திரமாலை

18) சாய்ந்திருந்த சிவலிங்கத்தை குங்கிலிய கலய நாயனார் நிமிர்த்திய அற்புதம் நிகழ்ந்த தலம்
(1) திருப்பனந்தாள் (2) திருவதிகை
(3) திருக்கடவூர் (4) திருத்தூங்கானை

19) ஆணவமாகிய பெரும் இருட்டினுள்ளே அழுந்திக்கிடக்கின்ற ஆன்மாவுக்கு இறைவனை அறிவதாகிய பேரொளி தோன்றும் வரையில் கைவிளக்குப்போல் வழிகாட்டுவது
(1) ஆணவம் (2) மாயை (3) உயிர் (4) கன்மம்

20) 'தென்கயிலை' என சிறப்பாகக் குறிப்பிடப்படுவது
(1) திருவண்ணாமலை (2) திருக்காளத்தி
(3) தோணிபுரம் (4) திருவதிகை

21) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இரண்டினையும் பாடியவர்
(1) திருமாளிகைதேவர் (2) கபிலதேவர்
(3) சேந்தனார் (4) சேக்கிழார்

22) மணமகளின் பெற்றோர் தம் மகளை மணமகனிடம் ஒப்படைக்கும் சடங்கு
(1) தாலிகட்டுதல் (2) கன்னிக்கால் நாட்டல்
(3) நிச்சயதார்த்தம் (4) கன்னிகாதானம்

23) விஷ்ணுமூர்த்தி கிருஷ்ணபகவானாக அவதரித்த இடம்
(1) மிதிலை (2) அயோத்தி
(3) துவாரகாபுரி (4) திருதருமபுரம்

24) 'கழறிற்றறிவார்' என அழைக்கப்பட்டவர்
(1) சுந்தரர் (2) சேக்கிழார்
(3) சேரமான் பெருமாள் (4) கச்சியப்பர்

25) பொய்ச்சாட்சி சொன்ன காரணத்தால் உமாதேவியின் சாபத்துக்கு ஆளாகிப் பாம்பாக மாறியவர்
(1) திருமால் (2) பிரமன் (3) சயந்தன் (4) பஞ்சபாண்டவர்

26) சிவபெருமானின் ஞானசோதி வடிவான திருமேனி
(1) நடராஜர் (2) சிவலிங்கம்
(3) மகேஸ்வரர் (4) திரிபுராந்தகர்

27) புரட்டாதி மாத அபரபக்க பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம்
(1) மகாளயபட்சம் (2) சிரார்த்தம்
(3) மாசிகம் (4) திவசம்

28) அகத்தே அணியும் சிவசின்னமாக அமைவது
(1) உருத்திராக்கம் (2) பஞ்சாட்சரம்
(3) சந்தனம் (4) திருநீறு

29) பரமுத்தியை பெறுவதற்கு வழிகாட்டும் மார்க்கம்
(1) கிரியை (2) சரியை (3) ஞானம் (4) யோகம்

30) சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் பாடசாலையினை அமைத்தவர்
(1) சுவாமி விபுலானந்தர் (2) சைவப் பெரியார் அருணாசலதேசிகர்
(3) சேர் பொன்.இராமநாதன் (4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

31) மாகேஸ்வரபூசை என குறிப்பிடப்படுவது
(1) ஞானிகளுக்கு உணவளிப்பது (2) சிவனடியார்களுக்கு உணவளிப்பது
(3) ஏழைகளுக்கு உணவளிப்பது (4) விலங்குகளுக்கு உணவளிப்பது

32) சமயவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்படும் பிரதான பிரமானம்
(1) ஆப்தவாக்கியம் (2) அநுமானம்
(3) பிரத்தியட்சம் (4) உபமானம்

33) இறைவனின் மூவகைத் திருமேனிகளுள் உருவத் திருமேனியுள் **அடங்காதது**
(1) பிரமா (2) விஷ்ணு (3) சதாசிவம் (4) உருத்திரன்

34) நவீனயுகத்து அரிச்சந்திரன் என போற்றப்பெறுபவர்
(1) மகாத்மா காந்தி (2) திருவள்ளுவர்
(3) ஔவையார் (4) பாரதியார்

35) பாஞ்சால மன்னன் புத்திரபேறு வேண்டி யாகம் செய்த போது யாகாக்கினியிலே தோன்றியவர்
(1) கண்ணகி (2) சீதை
(3) திரௌபதை (4) உமை

36) "மீதுபடு திண் தோள் விடலை ...." என மீட்சிப்படலப் பாடலடியில் குறிப்பிடப்படுபவர்
(1) சயந்தன் (2) முருகன் (3) இந்திரன் (4) வீரவாகுதேவர்

37) விஜயநகர ஆட்சிக்காலத்தில் வைதீகநெறி சவாலுக்கு உள்ளான வேளையில் தலயாத்திரை செய்து அருட்பாக்களைப் பாடி அந்நெறியை தழைப்பித்தவர்
(1) அருணகிரிநாதர் (2) சேக்கிழார்
(3) திருஞானசம்பந்தர் (4) காரைக்கால் அம்மையார்

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

• மேல்வரும் அட்டவணையில் **A** இலிருந்து **I** வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **38** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவு செய்க.

முத்தி	சிறப்புப் பெயர்	நூல்
A – ஐப்பசி சுவாதி	D – கொற்றவன்குடி முதலியார்	G – சிவஞானபோதம்
B – சித்திரை அத்தம்	E – சகலாகம பண்டிதர்	H – கோயிற் புராணம்
C – புரட்டாதி பூரம்	F – சுவேதவனப் பெருமாள்	I - இருபா இருப.்.து

38) புறச்சந்தானகுரவர் பரம்பரையில் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவருடன் தொடர்புடைய தொகுதி
(1) ADH (2) CDH (3) BDH (4) BEI

39) பரஞ்சோதி முனிவரிடம் ஞான உபதேசம் கேட்டவருடன் தொடர்புடைய தொகுதி
(1) AFH (2) CEI (3) BFG (4) AFG

40) சந்தானகுரவர் பரம்பரையில் இளமையிலேயே ஆகமநூல் அறிவு மிகவும் நிரம்பப் பெற்றவருடன் தொடர்புடைய தொகுதி
(1) CEI (2) BEG (3) CFI (4) AFG

**

Past Papers Wiki

முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry Of Education, Higher Education and Vocational Education

12 | T | I,II

க.பொ.த.(சா/த) மாதிரி வினாப்பத்திரம் - 2026
G.C.E. (O/L) Model Question Paper – 2026

02

சைவநெறி I, II
Saivanery I, II

சைவநெறி - II

- முதலாம், இரண்டாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

(1) மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) தமிழ் வேதங்கள் எனப்படுபவை யாவை?
(ii) ஸ்ரீதட்சிணகைலாய புராணத்தில் குறிப்பிடப்படும் திருத்தலம் எது?
(iii) ஞானமார்க்கத்தில் உள்ள **நான்கு** அங்கங்களும் எவை?
(iv) சீர்காழிப் பதிக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(v) ஆசார்யவரணம் எனப்படுவது யாது?
(vi) கோயிலுக்குச் செல்லமுடியாதவர்களுக்கு இறைவனை நினைவூட்டி நிற்பவை எவை?
(vii) மூவகை ஆன்மாக்களுள் ஆணவ மலத்தால் மட்டும் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
(viii) பஞ்சாட்சரத்தின் பொருளையும் பெருமையையும் விளக்கும் சைவசித்தாந்த நூல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ix) பொலன்னறுவைக் காலத்தில் ஆலயங்களில் பூசைசெய்வதற்காக பிராமணர்கள் குடியமர்த்தப்பட்ட பிரதேசம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
(x) சைவசமயி ஒருவர் செய்யக்கூடிய அறச்செயல்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(2) (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) ''அந்தணாளன் உன் ...''
(ஆ) ''பாலுக்குப் பாலகன் ...''
(இ) ''யாவர்க்குமாம் இறைவற்கு...''
(ஈ) ''உம்பர்த்தருத் தேனு...''
(உ) ''ஆத்தாளை எங்கள்...''

(ii) மேலே **(i)** இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

(3) 'ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி'

(i) அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரருக்கு 'தென்னவன் பிரமராயன்' எனும் சிறப்புப் பட்டத்தைச் சூட்டியமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.
(ii) மாணிக்கவாசகர் இறைவனின் பிரிவுத்துயர் தாங்கமாட்டாதவராக அருளிய பனுவல்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
(iii) மாணிக்கவாசகருக்கு இறைவன் அருள்புரிந்த சம்பவங்களைச் சுருக்கமாக விளக்குக.

(4) "வேதம் இந்துசமயத்தின் முதல் நூல்"

(i) வேதம் 'அபௌர்ஷேயம்' என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
(ii) சாம வேதத்தின் சிறப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
(iii) வேதத்தின் உட்பிரிவுகளைக் குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(5) "பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மை யான்" - திருவருட்பயன்

(i) மேற்கூறிய பாடலில் இறைவன் எவற்றோடு ஒப்பிடமுடியாதவர் எனக் கூறப்பட்டுள்ளது?
(ii) சொரூபலக்கணத்தில் இறைவனின் இயல்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
(iii) தடத்தநிலையில் இறைவனால் ஆற்றப்படும் ஐந்தொழில்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

Past Papers Wiki

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

(6) ''திருக்கோயில் இல்லாத் திருவிலூரும் ....
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.....'' **- திருநாவுக்கரசர்**

(i) மண்டூர்கந்தசுவாமி ஆலயம் சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படுவதற்கான காரணங்கள் **இரண்டு** தருக.

(ii) பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயிலின் மூலவர், தீர்த்தம், தலவிருட்சம் என்பவற்றை முறையே குறிப்பிடுக.

(iii) நல்லூர் கந்தசுவாமி கோயில் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(7) மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) அன்புடமை

(ii) சுவாமி விபுலானந்தர்

(iii) வைரவர் வழிபாடு

(iv) சைவவித்தியா விருத்திச் சங்கம்

***

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library